# தினசரி நடப்பு நிகழ்வுகள்



**Useful For**
**TNPSC**
**Police**
**Bank Exams**

ஏப்ரல்
17
17-04-2021



தினகரன் தி இந்து தினத்தந்தி தினமலர் தினமணி We Shine Academy guiding you to get through

# உலக செய்திகள்

We Shine Online Classes
8939 144 344 | 8939 244 344

- அஸ்ட்ராஜெனெகாவின் கரோனா தடுப்பூசி பயன்பாட்டை டென்மார்க் நிரந்தரமாக நிறுத்தியது. இதன்மூலம் இந்த தடுப்பூசிக்கு நிரந்தர தடை விதித்த முதல் ஐரோப்பிய நாடாக டென்மார்க் விளங்குகிறது.

# தேசிய செய்திகள்

- சிபிஐ முன்னாள் இயக்குநர் ரஞ்சித் சின்ஹா தில்லியில் காலமானார். தனது 21வது வயதில் யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்ற ரஞ்சித் சின்ஹா 1947ம் ஆண்டில் பீகாரில் இருந்து மத்திய அரசுப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
  - இந்திய திபெத்திய எல்லை பாதுகாப்புப்படை, ரயில்வே பாதுகாப்புபடை, சிபிஐ ஆகிய துறைகளில் தில்லியிலும் பீகாரிலும் சுமார் 40 ஆண்டு காலம் பணியாற்றினார். 2012ல் சிபிஐயின் இயக்குநராக பொறுப்பேற்றார். காவலர் துறையில் அளப்பரிய சேவைக்காக குடியரசுத்தலைவரின் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

- கர்நாடக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் ஜே.சி.லின் உடல்நலக் குறைவால் காலமானார்.
  - வீரப்ப மொய்லி முதல்வராக இருந்த போது 1992 முதல் 1994ம் ஆண்டு வரையில் கர்நாடக அரசின் தலைமைச் செயலாளராக பதவி வகித்த ஜே.சி.லின் 1960ல் ஐஏஎஸ் அதிகாரி ஆனார். 1983-84ம் ஆண்டில் தொழில் துறை செயலாளராக பதவிவகித்த போது பெங்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தை முதல்முறையாக கொண்டு வந்தவர் என்ற பெருமைக்குரியவர். வீரேந்திர பாட்டீல், டி.தேவராஜ் அர்ஸ், ஆர்.குண்டுராவ் ஆகிய முதல்வர்களின் தனிச் செயலாளராக 10 ஆண்டுகள் பணியாற்றியவர்.

- கதிரியக்க சிகிச்சை நிபுணர் டாக்டர். காகர்லா சுப்பாராவ் காலமானார். டாக்டர் காகர்லா சுப்பாராவ் பத்ம ஸ்ரீ விருது பெற்றவர். ஐதராபாத்தில் உள்ள நிஜாம் மருத்துவ அறிவியல் கழகத்தின் இயக்குனராக அவர் இருந்தபோது பன்நோக்கு மருத்வமனையாக மாற்றினார். நியூயார்க் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மருத்துவ கல்லூரியில் கதிரியக்கவியல் பேராசிரியர் உட்பட மருத்துவ பணியில் பல பதவிகளை வகித்தார்.

- கரோனாவை கட்டுப்படுத்த முக்கிய முடிவுகளை எடுக்கும் பொறுப்பாக தில்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியாவுக்கு கரோனா மேலாண்மை பொறுப்பு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.
  - கரோனா பரவலை கட்டுப்படுத்த முக்கிய முடிவுகளை செயல்படுத்தும் பொறுப்பையும் அமைச்சர்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பையும் அவர் ஏற்கிறார்.

# தமிழக செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- சமூக நல திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக ‘இன்டராக்டிவ் ஃபோரம் ஆன் இந்தியன் எகானமி’ அமைப்பு சார்பில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு சமூகநலத் திட்டங்களுக்கான ‘சேம்பியன்ஸ் ஆப் சேஞ்ச்’ விருது கோவா மாநிலம் தாஜ் ரெசார்ட் மற்றும் கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

# வர்த்தக செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- அசோக் லேலண்ட் நிறுவனம் லாக்கீட் மார்ட்டினுடன் இணைந்து தயாரித்த குண்டு துளைக்காத இலகுரக வாகனம் இந்திய விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் சிறிய விமான வடிவிலான பறக்கும் இ-டாக்சியை சென்னை ஐஐடி வடிவமைத்துள்ளது. மின்கலம் மூலம் இயங்கும் இதில் 2 பேர் பயணிக்க முடியும். இந்த இ-டாக்ஸி சுமார் 200 கிலோ அளவிலான எடையை சுமந்தபடி மணிக்கு 200 கிமீ வேகத்தில் பறக்கும்.
  - 'தி இ-பிளேன் கம்பெனி' என்ற புதிய நிறுவனம் இதை தயாரித்தது.

# விளையாட்டு செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் வினேஷ் போசத் தங்கம் வென்றார். மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் அன்ஷீ மாலிக் தங்கம் வென்றார்.

- மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் போலந்து வீரர் ஹியூபெர்ட் கோர்காக்ஸ் சாம்பியன் பட்டம் வென்றார்.
  - ஹியூடெர்ட் 1000 தரவரிசை புள்ளிகள் கொண்ட ஏடிபி மாஸ் டாஸ் பட்டத்தை ருசித்த முதல் போலந்து வீரர் என்ற பெருமையை பெற்றார். இந்த ஆண்டில் அவர் கைப்பற்றிய 2வது பட்டம் இதுவாகும்.

# Expected Questions

We Shine Academy
Guiding you to get through

1. அஸ்ட்ரோஜெனகாவின் கரோனா தடுப்பூசி பயன்பாட்டை எந்த நாடு தற்போது நிரந்தரமாக நிறுத்தியது?

விடை: டென்மார்க்

2. அஸ்ட்ரோஜெனகாவின் கரோனா தடுப்பூசிக்கு நிரந்தர தடை விதித்த முதல் ஐரோப்பிய நாடாக எந்த நாடு விளங்குகிறது?

விடை: டென்மார்க்

We Shine Academy
Guiding you to get through

3. கரோனாவை கட்டுப்படுத்த முக்கிய முடிவுகளை எடுக்கும் பொறுப்பாக யாருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது?

விடை: தில்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா

4. திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு 2021ம் ஆண்டு சமூகநலத் திட்டங்களுக்கான எந்த விருது கோவா மாநிலத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது?

விடை: சேம்பியன்ஸ் ஆப் சேஞ்ச்

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

5. சேம்பியன்ஸ் ஆப் சேஞ்ச விருது எந்த அமைப்பு சார்பாக வழங்கப்படுகிறது?

விடை: ‘இன்டராக்டிவ் ஃபோரம் ஆன் இந்தியன் எகானமி’


8939 144 344 | 8939 244 344

6. அசோக் லேலண்ட் நிறுவனம் எந்த நிறுவனத்துடன் இணைந்து குண்டு துளைக்காத இலகுரக வாகனம் தயாரித்து இந்திய விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது?

விடை: லாக்கீட் மார்ட்டின்

7. போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் சென்னை ஐஐடி வடிவமைத்துள்ள சிறிய விமானத்தின் பெயர் என்ன?

விடை: இ-டாக்சி

8. இ-டாக்சியை எந்த நிறுவனம் தயாரித்தது?

விடை: தி இ-பிளேன் கம்பெனி

We Shine Online Classes
8939 144 344 | 8939 244 344

9.இ-டாக்சியில் எத்தனை பேர் பயணிக்க முடியம்?

விடை: 2 பேர்

We Shine Online Classes
8939 144 344 | 8939 244 344

10. இ-டாக்ஸியில் எத்தனை கிலோ அளவிலான எடையை சுமந்தபடி மணிக்கு 200 கிமீ வேகத்தில் பறக்கும்?

விடை: 200 கிலோ

11. ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர்க்கான 53 கிலோ எடைப்பிரிவில் தங்கம் வென்றவர் யார்?

விடை: வினேஷ் போகத்

12. ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர்க்கான 57 கிலோ எடைப்பிரிவில் தங்கம் வென்றவர் யார்?

விடை: அன்ஷீ மாலிக்

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

13. மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

விடை: போலந்து வீரர் ஹியூபெர்ட் கோர்காக்ஸ்

14. ஹியூடெர்ட் 1000 தரவரிசை புள்ளிகள் கொண்ட ஏடிபி மாஸ் டாஸ் பட்டத்தை பெற்ற முதல் போலந்து வீரர் யார்?

விடை: ஹியூபெர்ட் கோர்காக்ஸ்

# April 16th Quiz Questions and Answers

உலகிலேயே மிகப்பெரிய கோப்பை எந்த விளையாட்டிற்கு வழங்கப்படுகிறது?

a) கிரிக்கெட்

b) கால்பந்து

c) ஹாக்கி

d) போலோ

We Shine Academy Guiding you to get through

கீழ்கண்ட மாநிலங்களில் புலிகள் பாதுகாப்பகம் இல்லாத இந்திய மாநிலம் எது?

a) மேற்கு வங்காளம்

b) ஜம்மு மற்றும் காஷ்மீர்

c) உத்தரகண்ட்

d) கேரளா

We Shine Academy
Guiding you to get through

இந்தியாவில் அகல இருப்புப் பாதை இரயில் எஞ்சின்கள் தயாரிக்கப்படும் இடம் எது?

a) கான்பூர்

b) பரோடா

c) சித்தரஞ்சன்

d) சென்னை

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

தகவல் அறியும் உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் எப்போது நிறைவேற்றப்பட்டது?

a) அக்டோபர் 19 - 2004

b) அக்டோபர் 12 - 2005

c) அக்டோபர் 22 - 2010

d) ஜூலை 12 - 2004

தில்லியை ஆண்ட முதல் பெண்மணி யார்?

a) ரசியா பேகம்

b) சாந்த் பீவி

c) மும்தாஜ் மகால்

d) மெஹர்-உன்-நிசா

We Shine Academy™ Guiding you to get through

# Today Quiz

We Shine Academy
Guiding you to get through

உயர்நீதிமன்றம் உள்ள யூனியன் பிரதேசம் எது?

a) பாண்டிச்சேரி

b) டெல்லி

c) டையூரு டாமன்

d) அந்தமான் & நிக்கோபர்

We Shine Academy
Guiding you to get through

வடக்கு-தெற்கு காரிடர் மற்றும் கிழக்கு-மேற்கு காரிடர் இணையும் இடம் எது?

a) போபால்

b) ஆக்ரா

c) ஜான்சி

d) நாக்பூர்

We Shine Academy Guiding you to get through

பசுமைப் புரட்சியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

a) M.S. சுவாமிநாதன்

b) நார்மன் போர்லாக்

c) அமர்த்தியாசென்

d) இவற்றில் எவருமில்லை

We Shine Academy™ Guiding you to get through

உலகிலேயே மிகப்பெரிய நூலகம் எங்கு உள்ளது?

a) மாஸ்கோ

b) கொல்கத்தா

c) லண்டன்

d) நியூயார்க்

We Shine Academy™ Guiding you to get through

சட்டப் பிரிவு 370 நடைமுறைக்கு வந்த வருடம் எது?

a) 1951

b) 1957

c) 1956

d) 1954

We Shine Academy
Guiding you to get through

## திருக்குறள்

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு".

**விளக்கம்:**

விடாமுயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாரும் தகுதியானவருக்கு உதவி செய்தவற்கே ஆகும்.

# மிக்க நன்றி

We Shine Academy Guiding you to get through